ஒபெக் நிதியளிக்கப்பட்ட வீதி வலையமைப்பு அபிவிருத்திச் செயற்திட்டத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்திற்கும் சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2012 ஒத்தோபர் 08 ஆந் திகதிய 1452பி ஆம் இலக்க கடன் உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

வீதி வலையமைப்பு அபிவிருத்தி கடன் உடன்படிக்கையின் படி, முன்னாள் நெடுஞ்சாலைகள் துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சும் தற்போதைய உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சும் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. இலங்கையினுடைய அபிவிருத்தி கொள்கை மாதிரிவேலையின் ஒரு ஒன்றிணைந்த பகுதியாக நிர்மாணிக்கப்படுவதுடன் மேல், வடமேல், மத்திய, தென்கு மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் பாலங்களின் மீள்நிர்மாணம் மற்றும் அகலமாக்கல் என்பவற்றால் தேசிய நெடுஞ்சாலையின் 202 கிலோமீற்றரை தரமுயர்த்துவதன் மூலம் போக்குவரத்து துறையின் திடீரென அதிகரிக்கின்ற கேள்விகளை ஈடுசெய்வதற்கு வீதி வலையமைப்பு இணைப்பை முன்னேற்றுவதை இலக்காக கொள்வதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கையின்படி, செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 7,092.77 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 62.21 மில்லியனானதுடன் அதில் ரூபா 4,560 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 40 மில்லியன் சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியத்தால் நிதியளிக்க வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2013 சனவரி 16 இல் தொடங்கியிருந்ததுடன் 2016 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

## 1.4. கணக்காய்வாளரின் பொறுப்பு

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வையினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறள் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின்

பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை அப்பரிசோதனை உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்றும் நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பீடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள் சொத்துக்கள், பொறுப்புக்கள், கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செயற்திட்டத்தின் செலவினங்கள் முன்னேற்றப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டு இருந்தனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டுத் நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி நிபந்தனைகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2 நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமைய,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டுத் நியமங்களுக்கிணங்க 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி நிபந்தனைகளுடன் இணங்கியிருந்தன என்றும் நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

எகலியகொடை- தெகியோவிட்ட வீதி மற்றும் தெனியாய – மாதம்பே வீதியின் நிர்மாண வேலைகளிற்காக தெரிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரரால் கோரப்பட்ட நெகிழ்ச்சியுடைய வீதங்களின் உயர் ஆபத்தினை குறைப்பதற்கு தேசிய கொள்வனவு வழிகாட்டலின் 7.9.11(ஈ) ஆம் பிரிவில் வேண்டப்பட்டவாறு செயலாற்றல் பாதுகாப்பு பிணைமுறி உயர் பெறுமதியில் பெறப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மற்றும் செய்றபாட்டு மீளாய்வு

### 3.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடுகள் மற்றும் மீளாய்வாண்டின் போதான மற்றும் 2014 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டின் போது பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | நிதிகளின் பயன்பாடு | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2014 ஆம் ஆண்டின் போது | | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஓஎவ்ஐடி | 40.00 | 4,560.00 | 1,842.21 | 12.88 | 1,673.91 | 15.55 | 2,023.57 |
| இலங்கை அரசாங்கம் | 22.21 | 2,532.77 | 24.01 | - | 25.20 | - | 49.66 |
| | 62.21 | 7,092.77 | 1,866.22 | 12.88 | 1,699.11 | 15.55 | 2,073.23 |

மேற்குறிப்பிட்ட தகவல்களின் பிரகாரம், செயற்திட்ட காலத்தின் 02 ஆண்டுகள் கடந்த பின்னர் 38.8 சதவீதம் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. ஆகவே, மிகுதி 02 ஆண்டுகளின் போது செயற்திட்டத்தின் மொத்த ஒதுக்கீட்டை பயன்படுத்துவதற்கு வேண்டப்பட்ட நடவடிக்கை அமுலாக்கப்பட வேண்டியிருந்தது.

### 3.2 பௌதீக செயலாற்றல்

கிடக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தால் வழங்கப்பட்ட 04 ஒப்பந்தங்களின் பௌதீக முன்னேற்றம் பின்வருமாறு இருந்தது.

| வீதிகள் | வீதி நீளம் | எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தியாக்கல் திகதி | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பௌதீக முன்னேற்றம் | |
|---|---|---|---|---|
| | | | இலக்கு | உள்ளபடி |
| | | | % | % |
| பொல்காவெல– கேகாலை வீதியின் 3/2 ஆம் இலக்க பாலம் | - | 2014 திசெம்பர் 20 | 89 | 83 |
| காலி- தெனியாய- மாதம்பே வீதி | 13.93 | 2014 திசெம்பர் 31 | 75 | 66 |
| எகலியகொட- தெஹியவிட்ட வீதி | 16.69 | 2015 யூன் 10 | 77 | 51 |
| எத்துல்கோட்ட- மிரிஹன- கொகுவல வீதி | 5.95 | 2014 செப்தெம்பர் 09 | 96 | 95 |
| | 36.57 | | | |

பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், காலி- தெனியாய- மாதம்பே வீதி மற்றும் எகலியகொட- தெகியவிட்ட வீதி காணிச் சுவீகரிப்பு பிரச்சனைகள் மற்றும் மோசமான காலநிலைகள் காரணமாக தாமதப்பட்டிருந்தது. மேலும், பொல்காவெல– கேகாலை வீதியின் 3/2 ஆம் இலக்க பாலத்தின் நிர்மாண வேலைகள் ஆற்றின் தணணீர் மட்டம் அதிகரித்தல் மற்றும் நிர்மாணக் காலத்தின் போது குறைவான முகாமைத்துவம் காரணமாக தாமதப்பட்டிருந்தது.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 மார்ச் 31 இல் கள பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்ட எகலியகொட- தெகியவிட்ட வீதியின் புனரமைப்பு வேலைகளின் குறைபாடுகள் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளன.

(i) நெரிசல் பாதுகாப்பு மற்றும் கட்டுப்பாட்டிற்காக அளவீட்டுப் பட்டியலில் ரூபா 9.81 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்தகாரர் அந்த நோக்கத்திற்காக குறைந்த கவனம் செலுத்தப்பட்டிருந்தது. ஆகவே, வதிவிட பொறியியலாளர் வீதிப் பாவணையாளர்களின் இடையூறுகளைக் குறைப்பதற்கும் அவசியமான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் ஒப்பந்தகாரர்களிற்கு அறிவுறுத்தல்களை வழங்கியிருந்தார். எவ்வாறாயினும், பிரச்சனைகளை தீர்ப்பதற்கு ஒப்பந்தகாரரால் அர்த்தமுள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) வீதிப் பராமரிப்பு நோக்கங்களிற்காக அளவீட்டுப் பட்டியலில் ரூபா 6.90 மில்லியன் தொகை வழங்கப்பட்டிருந்த போதிலும் அத்தகைய பராமரிப்பு வேலைகள் முறைப்படி செய்யப்பட்டிருக்காததுடன் பல இடங்களில் வீதியின் மேற்பரப்பில் துளைகள் காணப்பட்டன.

(iii) ஒப்பந்த உடன்படிக்கையின் 1802.4(சீ) ஆம் பிரிவில் வழங்கப்பட்ட தொழில்நுட்ப குறிப்புரைகளின் பிரகாரம், பூர்த்தியாக்கப்பட்ட மேற்பரப்பு வேலைகளிலிருந்து எடுக்கப்பட்ட சகல மாதிரிகளின் அடர்த்தி இடங்களின் புள்ளி ஒதுக்கிடலில் மாச்சல் அடர்த்தி 98 சதவீதத்தை விட குறைவாக இருக்க வேண்டியதில்லை. எவ்வாறாயினும், 09 இடங்களில் குறிப்புரைகளின் மாதிரிகள் வேண்டப்பட்ட மட்டங்களில் இருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. ஒப்பந்தகாரரால் அந்த விடயத்தை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) ஆரம்ப கட்டத்தில் அளவீட்டுப் பட்டியலின் தயாரிப்பிலுள்ள குறைபாடுகளின் விளைவால், உப அடிப்படை மீளப்பெருத்துதலில் கூட்டுமொத்த அடிப்படை வேலைகளிற்காக ரூபா 30.68 மில்லியன் பெறுமதியான முரண் கட்டளைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) ஒப்பந்தத்தின் பொது நிபந்தனைகளின் 14.8 ஆம் பிரிவில் வேண்டப்பட்டவாறு, எத்துல்கோட்ட- மீரிகன- கொகுவல வீதியின் புனரமைப்பில் ஈடுபட்ட ஒப்பந்தகாரருக்கு இடைக்கால கொடுப்பனவின் தீர்ப்பனவிலுள்ள தாமதம் காரணமாக ரூபா 1.58 மில்லியன் தொகையான தாமதக் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருந்தது.

### 3.4 சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்

வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம், முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் 2007 ஏப்ரல் 05 ஆந் திகதிய 33 ஆம் இலக்க சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளால் மூடிவப்பட்டிருக்காத செயற்திட்டங்களின் சம்பளங்கள் மற்றும் பதவியணி தொடர்புபட்ட வேறு ஏதாவது விடயங்களிற்காக தொடர்புபடுத்தியிருக்க வேண்டும். எவ்வாறாயினும், உரிய அமைச்சு செயலாளரின் அங்கீகாரத்துடன் முகாமைத்துவ வேவைகள் திணைக்களத்திள் ஒத்திசைவு அவற்றால் கையாளப்பட்ட மேலதிக வேலைகளிற்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நெடுஞ்சாலை வடிவமைப்பு பிரிவின் உத்தியோகத்தருக்காக செலுத்தப்பட்ட ரூபா 2.35 மில்லியன் தொகையான ஊக்குவிப்பு படி கொடுப்பனவிற்காக பெறப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் வீதி வடிவமைத்தல் வேலைகளிற்காக நெடுஞ்சாலை வடிவமைப்பு பிரிவின் உத்தியோகத்தரால் எடுக்கப்பட்ட மேலதிக காலத்தை நிருபிப்பதற்கு கணக்காய்விற்கு சான்றுகள் கிடைத்திருக்கவில்லை.